www.tamilarangam.net



வாசகங்கள் தான். அதைவிட ரஞ்சனியுடன் எந்த வார்த்தையும் கதைக்கவில்லை.

பிடிப்பட்டியிலிருந்து சிவநாயகம் குடும்பமும், சாம்புமாமாவும் பிரிந்த ஆரம்பத்தில் தைப்பொங்கலுக்கும் மாசித் தேர் பின் திரு-ம் நினைம் பிள்ளைகளுக்கு ஒர் கிழமையும் பின் மாதத்திற்கு ஒர் தடவையும் ரெலிபோனில் கதைத்துக் கொண்டு வந்தவர்கள் பின் அதுவும் நன்கு குறைந்து நல்லநாள் பெரியநாளில் எடு-த்து வாழ்த்துக் கூறி சுகங்களை பரிமாறிக் கொள்வார்கள்.

அதிலும் கடைசியாகக் கூட கதைத்த நேரம் எப்போ என சாம்புமாமாவுக்கு ஞாபகம் இருக்கின்றது.

அது நந்தனின்ரை வயது வந்தபோது தான். தன் பொருளாதா-ர பிரச்சினைகளினால் தன் மூன்று பெண்களில் எந்தப் பிள்ளைக்-கும் கூட முறையாக நாலு பேருக்குச் சொல்லி தாலிக்கு தண்ணி வார்க்கவில்லை என்ற ஆதங்கம் சாம்புமாமாவுக்கு எப்போதும் இருந்து வந்தது. ஆகவே தான் நந்தன் விடயத்தை கேள்விப்பட்ட போது இதை தன் இழந்தது என்ற உரிமையை அதிகம் எடுத்த-வராக,

"அப்ப பரிமளம் பிள்ளைக்கு வடிவாய்ச் செய்வோம்" ரெலிபோனில் அவர் குரல் குதூகலித்தது.

ரெலிபோனின் மறுமுனையில் மௌனம்.

"என்ன பிள்ளை யோசிக்கின்றாய்! நானே வாறன். நீ ஒன்றுக்கும் பயப்படாதே. நானே வந்து எல்லாவற்றையும் நடத்தி வைக்கிறன்".

"இல்லை மாமா!..... இப்ப உதுகள் செய்யிறது எல்-லாம் டீசன்ற் இல்லை. இனி டெனிஸ்க்காரர் நாங்களும் விருந்து சொல்லிக் கொண்டிருக்கேலாது. பேசாமல் இந்தக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

